DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.187/2020

Deposition of Witness for – Prosecution : PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாபு | ஜாதி | : | |
| த/பெ | : | ஜெயராமன். | மதம் | : | |
| கிராமம் | : | முகப்பேர் | தொழில் | : | வியாபாரம் |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 28.05.2025**

**குறுக்கு விசாரணை: PW1**

1. Vignesh and Co என்ற நிறுவனத்தின் பங்குதாரர் என்ற அடிப்படையில் இவ்வழக்கில் பிரதிநிதியாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரிதான். நான் MA. M.Phil பட்டதாரி என்றால் சரிதான். பு.சா.ஆ.1 கூட்டாண்மை செய்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கூட்டாண்மை பத்திரத்தை நானும் என் மனைவி சாந்தியும் இனைந்து Vignesh and Co என்ற நிறுவனம் உருவாக்கினோம் என்றால் சரிதான். மேற்படி 200 ரூபாய் முத்திரை தாளில் ஒரு சாட்சி மட்டுமே கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை 2 பங்குதாரரும் சேர்ந்து தான் பராமரித்து நிர்வாகம் செய்து வரவேண்டும்என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டாண்மை பதிவு சான்றிதழ் அதன் எண்னோ மேற்படி பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வழக்கிறஞர் அறிவிப்பு புகார் மனு பிரமாண வாக்குமூலம் அனைத்து நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது அதிகார பத்திரம் எனது மனைவி கொடுத்தார்.

2. பொது அதிகார பத்திரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகார் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தெரிவிக்கவில்லை இவ்வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளேன். பு.சா.ஆ.2 இந்து நாளிதழில் தந்த செய்தித்தாளின் அசல் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.2 செய்தித்தாளில் Wanted Investor Rs.1 Crore Investment Require to promote premium Car sales and service company. High returns guaranteed. Strictly no brokers. 9840525555 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செய்தியில் எதிரி பெயர் மற்றும் நிறுவனம் குறித்து தெரிவிக்கபடவில்லை எதிரியின் கைப்பேசி மட்டும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயம் நான் அட்டை பெட்டி விற்பனையாளராக வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். அந்த காலகட்டத்தில் வேறு ஏதேனும் நிறுவனத்துடன் இணைந்து கூட்டு பங்குதாரராக வேலை பார்த்தேனா என்றால் இல்லை. 3 ம் தேதி எதிரியின் கார் நிறுவனத்திற்கு சென்று விசாரணை செய்து ஒரு வாரம் எதிரியுடன் பேச்சு வார்த்தை செய்தேனா என்றால் சரிதான். வியாபாரத்தை விரிவாக்கம் செய்ய குறைந்த பட்சம் 1 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார் என்றால் சரிதான். எதிரி நிறுவனத்திற்கு சென்றபோது விலை மதிப்பு அதிகம் உள்ள கார்களை தனது சோர்ரூமில் வைத்து விற்பனை செய்தால் அதிக லாபம் பெறலாம் என்றும் அதற்கு முதலீடாக பணம் செலுத்துமாறு தெரிவித்திருந்தார்.

3. எதிரியும் நானும் தீர பேச்சு வார்த்தை நடத்திய பின்பு தான் இருவருக்கும் இடையே ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். பு.சா.ஆ.3 ஒப்பந்தத்தை எனது கணக்காளர் மூலம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது கணக்காளர் உடன் இருந்தார் படித்து பார்த்த பின்பு தான் கையெழுத்து செய்தேன். ஒப்பந்தத்தை எதிரியின் கணக்காளர் தான் தயார் செய்தார். இவ்வழக்கில் பு.சா.ஆ.3 முக்கியமான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் எனது தரப்பு மற்றும் எதிரி தரப்பில் என்ன வேலை செய்யவேண்டும் என்று குறித்த வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ.3 ல் Roles of parties 4 வது பத்தியில் ரூபாய் 1 கோடி ரூபாய் எவ்வாறு செலுத்தி வியாபாரம் செய்யவேண்டும் என்ற முழு விவரமும் உள்ளது என்றால் சரிதான். எதிரி யாரின் அக்கவுண்ட்டிற்கு அனுப்ப சொல்கிறாரோ அவர்களின் கணக்கிற்கு அனுப்புவேன். மேற்படி ஒப்பந்ததத்தில் கூறியுள்ள 2 nd party நான் ஆவேன்.

(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

K. Mahasakthi
B.B.A.L.L.BHons

Digitally signed by K. Mahasakthi B.B.A.L.L.BHons
Date: 2025.05.30 09:31:14 +0530